# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**


**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA7711/F/2023**

திரு. த.சீனுவாசன் ரெட்டி … மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
மரக்காணம்,
விழுப்புரம் மாவட்டம் 604 303. … பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **21.11.2022** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **14.12.2022** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **26.04.2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.த.சீனுவாசன் ரெட்டி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.K.சுதாகர், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், மரக்காணம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 21.11.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு ஊராட்சிகள் விதிகளின் 1999 அரசாணை (நிலை) எண்

181 ஊரக வளர்ச்சித் துறை நாள் 30.08.1999 விதிகள் 4(2)இன் கீழ் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணை தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் தேர்தலின் போது இருந்த சொத்து மதிப்பின் ஆவணத்தையும் மற்றும் தற்போது உள்ள அசையும் அசையா சொத்துக்களின் ஆவணங்களின் உண்மை நகல்கள், 2021-2022ம் ஆண்டிற்குள் ஓமந்தூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டங்கள் எத்தனை முறை நடைபெற்றது அதன் வருகைப் பதிவேடு மற்றும் தீர்மான நகல்கள், பல்வகையான வரிவசூல் செய்யப்பட்டதன் ஆவண நகல்கள் மற்றும் அந்த தொகையின் வரவு செலவினங்களின் ஆவணங்களின் நகல்கள், மத்திய மாநில அரசால் வழங்கப்பட்ட புதிய சாலை மற்றும் பராமரிப்பு தொடர்பான அனைத்து ஆவணங்களையும், 2021-2022ம் ஆண்டிற்குள் மத்திய மாநில அரசால் வழங்கப்பட்ட மின் விளக்குகள் புதியதாக அமைக்கப்பட்டது மற்றும் பழைய விளக்குகள் பழுது பார்த்தது, இந்திராகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் (100 நாட்கள்) வேலை கீழ் உள்ள பயனாளிகள் எத்தனை பெயர் அவர்களின் பெயர், முகவரி என்பது போன்ற தகவல்களை 11 இனங்களில் தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 14.12.2022 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 26.04.2023 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 07.12.2022 மற்றும் 15.12.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டது, இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, ***இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது***.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA7711/F/2023</u>**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
மரக்காணம்,
விழுப்புரம் மாவட்டம் 604 303.

**வழக்கு எண். SA7711/F/2023**

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**

திரு. த.சீனுவாசன் ரெட்டி த/பெ. தம்புசாமி ரெட்டி
பிள்ளையார் கோவில் தெரு
ஓமந்தூர் & அஞ்சல், திண்டிவனம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 604 102.

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025